# பொங்கல் விழா - 2004

(அனைவருக்கும் இங்கிதமான பொங்கல் விழா வாழ்த்துக்கள்)

கண்கள் - கண்ணீரைத் தத்தெடுக்கும்
நினைவழியா நாட்களவை
பள்ளியிலே பம்பரமாய்
சுழன்றடித்த பறவைகளாய்
பனைமரத்து அணில்களுக்கு
குறிவைக்கும் வேடர்களாய்
பின்வளவு மரங்களிலே
தாவித் திரியும் குரங்குகளாய்

நிலாக்கால முற்றத்திலே
மண்வீடு கட்டும் மறவர்களாய்
துலாக்கயிற்றின் சத்தத்திலே
தூங்கிப்போகும் ரசிகர்களாய்
பலாச்சுளையின் எச்சத்திலே
பிய்த்துக் கொள்ளும் சோதரராய்

கைகளில் கவளச் சோற்றை
வாங்கித் தின்னும் பாசங்களாய்
பைகளைப் பிரித்து உண்ணும்
நேசமிகு நெஞ்சங்களாய்
மெய்களைப் பேசி என்றும்
தெளிவு பெற்ற மனிதர்களாய்

வாழ்ந்த காலம் கடந்த காலம்
எம் நெஞ்சில் இன்னும்
வாழும் காலமும் அந்தக் காலம் தான்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று
வரலாறாய் பல காலம் சொல்லிச் சொல்லி
வரலாறு மாறவேண்டும்
மனிதரெல்லாம் மாறவேண்டும்
மானிடம் மாறவேண்டும்
நாடுகள் மாறவேண்டும்
இப் பூமியே மாறிட வேண்டும் - என்று
பிரதி தை தோறும் நினைக்கிறோம்
ஆனால்
நான் என்ற என்னை மட்டும்
நான் மாற்றவே மாட்டேனாம்

என் குணம்
என் குலம்
என் தன்நலம்
என் தனித்துவம்
என் தலைக்கனம்
என் புகழ்விரும்பித் தனம்
என் பதவி மோகம்
என் சேமிப்பு
என் பண்டமாற்று
என் கோபம்
என் அதிகாரம்
என் ஆணவம்
என் அகங்காரம்
இன்னும் இன்னோரன்ன
என் அனைத்தையும்
நான் மாற்றத் தயாரில்லை

ஆனால்
தை பிறந்தால்
என்னைச் சுற்றியுள்ள
அத்தனை மனிதர்களும்
அத்தனை விலங்குகளும்
அத்தனை பிராணிகளும்
அத்தனையும்
*என்னைத் தவிர*
*அத்தனையும்*
மாறிவிட வேண்டுமென
நினைக்கிறேன்
தை பிறந்தால்
*எனக்கு* வழி பிறக்க வேண்டுமென்பதில்
அத்தனை குறி எனக்கு

புதிதாய் வாழ்வோம் இந்த ஆண்டிலே
விதியை வெல்வோம் அதே ஆண்டிலே
என்று சென்ற ஆண்டிலும்
அதற்கு முந்திய ஆண்டிலும்
பாடிப்பாடி மகிழ்ந்தாலும்
இந்த ஆண்டிலும்
நான் புதிதாய் வாழ
புதிதாய் மாற
என்னை என்னிடமிருந்து களைய
நான் தயாராயில்லை

நாம் இங்கே
கரங்களை இணைக்கத் தயார்
கருத்துக்களை இணைக்கத் தயாரில்லை
கருத்துக்கள் இணையாமல்
கரங்கள் இணைந்தென்ன லாபம்
நாளைய போர்முனை
என் இதயத்தினுள் இளமையாய் வேர்விட்டிருக்க
இன்று நள்ளிரவு மட்டும்
உன்னதங்களிலே பாடி விட்டால்
புதிய ஆண்டு பிறக்குமென்னும்
புளித்துப்போன சம்பிரதாயங்களிலிருந்து
எப்போது நாம் புதிதாய்ப் பிறக்கப் போகிறோம்

சமாதானச் சடங்கின் போது
சண்டைபோடும் மிருகத் தனங்கள்
எப்போது தொலையப் போகிறது
வீதியிலுள்ள வேகத்தடையை
சபிக்கிறேன்
என் நெஞ்சிலுள்ள
அதிவேகத்தடையை
எப்போது நசுக்கப் போகிறேன்

ஆக
*எனக்காக நான்*
*எனக்காக மற்றவர்*
*எனக்காக நாடுகள்*
*எனக்காக உலகம்*
*எல்லாம் எனக்காகத்தான்*
நான் நானாகவே இருக்க
என்னைச் சுற்றி அனைத்தும்
புதிதாய்ப் பிறந்திட வேண்டும்
இது நடக்குமா

உழவர் திருநாள்
பொங்கி மகிழும் நாள்
பொங்கலைப் புகழ்பாடும் கவிபாடு
என்றெனைக் கேட்டாலும்
உழுதுண்டு வாழ்ந்த
உழவர்கள் பண்பான
பொதுநலம் மறந்தால்
பொங்கல் இனிக்குமா என்ன?

பொங்கல் உட்பட
அத்தனையும் வியாபாரப் பொருளாகிப்
போய்விட்ட புது யுகம் இது
புதுயுக வியாபாரத்தில்
ஆலயங்கள்
பாயிரங்கள்
புத்தகங்கள்
பத்திரங்கள்
குருத்துவங்கள்
திரித்துவங்கள்
திருச்சபைகள்
இன்னும்
இன்று
விவிலியமே
வியாபாரமாய்
மாறிப்போய் நிற்கிறது

உழுதுண்டு வாழ்வதைவிட
உண்மைபேசி வாழ்வது அவசியம்
40 வருடங்களாய்
இறைவன் என்று அழைத்தவரை
இன்று
வியாபாரத்திற்காய்
தேவன் என்றும் கர்த்தர் என்றும்
உருமாற்றிக் கொண்டுள்ளோம்

ஆமேன் என்னும்
அர்த்தமுள்ள தூய ஒப்புதல்பதம்
இன்று
அர்த்தமின்றி அலசப்படும்
கூச்சற் பொருளாய்
மாறிப்போய்க் கிடக்கிறது!

தூக்கமற்ற இரவுகளையும்
துன்பமற்ற நாட்களையும்
கவலையற்ற மாதங்களையும்
அழுகையற்ற மனிதர்களையும்
அஸ்தமனமில்லா வானத்தையும்
மட்டுமல்ல
இவற்றைப் படைத்த இறைவன்
நம்பிக்கை ஆறுதல் வெளிச்சம்
என்ற பிரதிபலிப்புக்களையும்
மனிதர்களில் தெளித்திருக்கிறார்

வேகத்தடையின் பின்னே
சுகமான வீதிகள் காத்திருக்கின்றன
அஸ்தமனத்தின் பின்னே
அழகான அதிகாலை காத்திருக்கிறது
வழிபாடுகளுக்குப் பின்னே
இனிமையான இதயங்கள் காத்திருக்கின்றன
நீண்ட செபங்களுக்குப் பின்னே
வல்ல இறைவன் மனித உருவில்
உங்களருகே உட்கார்ந்திருக்கிறார்

நான் மாறிக்கொண்டால்
நண்பனும் மாறுவான்
நண்பியும் மாறுவாள்
நண்பகல் கரையுமுன்
பூமியே மாறிவிடும்
நான் தயாரா
என்னை நானே கேட்டு
முடிந்தால் நானாக மாறிக்கொண்டு
மனிதத்தை மதித்து
மனித நேயத்தைக் காத்து
மதிப்புடன்
பொங்கல் செய்து உண்டிட
மங்கலமான உழவர் திருநாள்
வாழ்த்துக்கள் கூறி
அமைகிறேன்

நன்றி
வணக்கம்
தை 18, 2004 (ஞாயிற்றுக்கிழமை)
(புனித மரிய கொறற்றி ஆலயத்தில்,
தைப்பொங்கல் விழா திருப்பலிக்காகப்
படிக்கப்பட்ட கவிதை)